under the temporary category under rule 10 (*a*) (i) by the officers themselves without consulting the PublicService Commisson or the Employment Exchange but continue torecruit either through the Employment Exchange or the Madras Public Service Commissison.

THE HON. THIRU K. A. MATHIALAGAN: It is a dangerous proposition and the Government do not share the view of the hon. Member.

நீலகிரி மாவட்ட கடைநிலை ஊழியர்களுக்குச் சீருடை.

*309. **வினா—திரு கே. போஜன்**: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள சர்க்கார் கடைநிலை ஊழியர்களுக்கு சில ஆண்டுகளாக சீருடை வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் என்றால் இதற்குக் காரணம் என்ன ?

(உ) இவர்களுக்கு உடனடியாக சீருடை வழங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்: (அ)(உ) சிலயிடங்களில் கடைநிலை ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படவில்லை என்பதாக நிலைமைகள் இருக்கின்றன. ஆனால் அவைகள் சீக்கிரமாகக் கிடைக்கும்படியான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. கே. போஜன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள கடைநிலை ஊழியர்களுக்கு சுமார் 3, 4 ஆண்டுகளாக சீருடை கொடுக்கப் படவில்லை. எனவே, சர்க்கார் உடனடியாகக் கவனித்து விரைவில் அவைகளைக் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறது. சப்ளை வந்து சேரவில்லை ஒவ்வொரு இலாக்காவிற்கும் எழுதி இருக்கிறோம். துணிவரவில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியைக் கொண்டு அது விரைவு படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இனாம் நிலங்கள் ஒப்படை

*310. **வினா—திரு. பி. வேலுசாமி**: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இனாம்காலை பூமிகளை விவசாயம் செய்து கொண்டுள்ளவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன்: ஆம். இனாம்தாரரோ அல்லது உழவரோ நிலம் ஒன்றின் பட்டா பெறாதவிடத்து, சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு தமிழ் நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் அல்லது தமிழ் நாடு 1963-ம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தில் விதித்துள்ள வாறு அந்த நிலத்தின் பட்டா பெறுவதற்குப் பயிரிடும் குத்தகைக்காரர் தகுதியுடையனராவார்.